SSS

(19)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்
02 SEP 2016
சென்னை - 600 015.

சுருக்கம்

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CSIDS) – 2016–2017–ஆம் ஆண்டு திட்டத்தை செயல்படுத்துதல் – நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – ஏற்பளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–1) துறை

அரசாணை(நிலை) எண். 98

நாள்: 31.08.2016

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண். 101, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 02.12.2011.
2. அரசாணை (நிலை) எண். 46, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 14.06.2012.
3. அரசாணை (நிலை) எண். 81, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 16.07.2013.
4. அரசாணை (நிலை) எண். 82, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 7.7.2014.
5. அரசாணை (நிலை) எண். 72, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை நாள் 29.4.2015.
6. அரசாணை (நிலை) எண். 63, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 6.6.2016.
7. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண். 44925 / 2015 / SSS-2, நாள் 31.7.2016.

----

**ஆணை:**

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான புதிய கட்டடங்கள், சமையல் கூடம், குடிநீர் வழங்குதல், கழிப்பறைகள், இதர பிற வசதிகளை ஏற்படுத்திடும் குறிக்கோளுடன் 2011–2012–ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்ட ஒன்று முதல் ஐந்து வரை காணப்படும் அரசாணைகளில் முறையே 2011–2012, 2012–2013, 2013–2014, 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டுகளில் ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் 100

கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்து செயல்படுத்திட ஆணைகள், விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுடன் வெளியிடப்பட்டன.

3. மேலே 6–ல் படிக்கப்பட்ட அரசாணையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, 2016–2017 –ஆம் ஆண்டிற்கான மாநில நிதி ஆணைய மானியம் விடுவிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. மேலே ஏழில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், 2016–2017–ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்திட கருத்துரு மற்றும் வரைவு வழிகாட்டி நெறிமுறைகளை அனுப்பி, 2016–2017–ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்திட தேவையான ரூ.100 கோடியை, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்து முறையே 2:1 விகிதத்தில் (அதாவது) ரூ.67 கோடியை ஊராட்சி ஒன்றியப் பங்கிலிருந்தும் மற்றும் எஞ்சிய தொகையான ரூ.33 கோடி நிதியை மாவட்ட ஊராட்சிகளின் பங்கிலிருந்தும் பெற்று 8 தவணைகளில் மாவட்டங்களுக்கு விடுவிப்பு செய்யலாம் எனக் குறிப்பிட்டு, 2016–2017–ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்திட தேவையான ஆணைகளை வழிகாட்டு நெறிமுறைகளுடன் வெளியிடுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) 2016–2017–ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த, 2016–2017–ஆம் ஆண்டிற்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்காக மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து முறையே 2:1 என்ற விகித்தில் ரூ.100 கோடி தொகையில் குறிப்பிட்டவாறு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது:–

| | |
|---|---|
| ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு | – ரூ.67 கோடி |
| மாவட்ட ஊராட்சிகளின் பங்கு | – ரூ.33 கோடி |

(ii) மேலே 6–ல் படிக்கப்பட்ட அரசாணையில், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட, மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து மேற்குறிப்பிட்ட நிதியை பிடித்தம் செய்து 8 தவணைகளில் மாவட்டங்களுக்கு விடுவிப்பு செய்திட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(iii) 2016–2017–ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக).
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–03.
முதன்மை தலைமை கணக்கு அலுவலர், சென்னை–9/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா–1) துறை, சென்னை–9.
(தொடர் நடவடிக்கைக்காக)
தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னை–9.

நகல்

மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ/நிதி ஆணையம்– IV)
துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

அரசாணை (நிலை) எண். 98, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.1) துறை,

நாள். 31.08.2016

இணைப்பு

# 2016–17 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்துவதற்கான வரைவு வழிகாட்டு நெறிமுறைகள்

1. முன்னுரை

ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான புதிய வகுப்பறைகள், சமையலறைகள், கழிப்பறைகள் கட்டுதல், குடிநீர் வசதி ஆகியவற்றை ஏற்படுத்தி தருவதுடன், பழுதடைந்த வகுப்பறை, சமையலறை, கழிப்பறை, குடிநீர் வசதி அமைப்புகள் போன்ற பணிகளை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

2. பள்ளிகளை தேர்வு செய்தல்

2016– 17ஆம் ஆண்டில், மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகள், சமையலறைகள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வழங்குதல் போன்ற புதிய பணிகள் தேவையின் அடிப்படையில் எடுத்துச் செய்யப்படும். ஆனால், பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள், 2011–12–ம் ஆண்டு தாய் திட்டத்தினை செயல்படுத்திடத் தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் மட்டுமே தேவையின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும். மேலும் எடுக்கப்படவுள்ள பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் கடந்த மூன்று வருடங்களுக்குள் இதர பிற திட்டங்களின் கீழும் மேற்கொண்டிருக்கக் கூடாது. பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்கு முன் சம்மந்தப்பட்ட தகுதிவாய்ந்த தொழில்நுட்ப அலுவலர்களிடம் கட்டமைப்பு உறுதித் தன்மை குறித்த சான்று பெறப்படவேண்டும்.

பேரூராட்சிகள், நகராட்சிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகளை பொருத்தமட்டில், தாய் திட்ட கிராமங்கள் என்ற வரையறை ஏதுமில்லாமல், பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் தேவையின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படலாம். ஆனால் கடந்த மூன்று வருடங்களுக்குள் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்ட பள்ளி கட்டடங்களில் பழுதுபார்த்தல் பணிகள் எடுத்துக்கொள்ளக்கூடாது.

அடிப்படை வசதிகள் மற்றும் இதர பணிகளின் வகைபாடு

கீழ்க்காணும் நான்கு வகையான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இதர பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

(i) பள்ளி கட்டடங்கள்

A) புதிய வகுப்பறை கட்டடம்

- ❖ புதிய வகுப்பறை கட்டடம் அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கட்டப்படவேண்டும். (தோராயமாக ஒரு மாணவருக்கு 9 சதுர அடி)
- ❖ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தின் (Type Design)அடிப்படையில் புதிய பள்ளி கட்டடம் சுண்ணாம்பு நீர் கலவையுடன் கூடிய (Weathering course) கான்கிரிட் கூரையினை தண்ணீர் கசியாத வகையில் கட்டுதல் வேண்டும்.
- ❖ பள்ளிகளுக்கு புதிய வகுப்பறைகள் பள்ளி வளாகத்தில் உள்ள காலி இடத்தில் அமைக்கப்படுதல் வேண்டும்.
- ❖ புதிய வகுப்பறைகள் கட்டத் தேவையான காலி இடம் இல்லாத நிலையில், ஏற்கனவே உள்ள கான்கிரிட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித் தன்மை சம்பந்தப்பட்ட மாவட்ட செயற்பொறியாளரால் (ஊ.வ) உறுதி செய்யப்பட்ட பின்னர் அக்கட்டடத்தின் மேல்தளத்தில் புதிய கட்டடம் கட்டப்படலாம்.
- ❖ புதியதாக கட்டப்படும் பள்ளி கட்டடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்பு கண்டிப்பாக ஏற்படுத்தப்படவேண்டும்.

B) ஏற்கனவே உள்ள பள்ளி வகுப்பறை கட்டடம் பழுதுபார்த்தல்

- ❖ பழுதடைந்த கான்கிரிட் கூரைகளை பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ளும்போது, (தண்ணீர் கசியாத வகையில் சுண்ணாம்பு நீர் கலவை (Weathering course) சேர்த்தல் போன்றவை) மழைநீர் சேகரிப்பு இல்லாமல் இருப்பின் அல்லது பழுதடைந்திருப்பின், அவ்விடங்களில் ஏற்படுத்தி தரலாம் .
- ❖ தரையை பழுது பார்த்தல் / பழுதடைந்த தரையை மாற்றியமைத்தல்
- ❖ கரும்பலகைகளுக்கு வர்ணம் பூசுதல்
- ❖ பழுதடைந்த கதவுகள் மற்றும் சன்னல்களை பழுதுபார்த்தல்/மாற்றியமைத்தல்
- ❖ சிறிதளவு பழுதடைந்த ஓடுகள் / உத்திரம் / ஓடுகள் வேயப்பட்ட கட்டடங்களிலுள்ள பட்டிகள் பழுது பார்த்தல்
- ❖ கட்டட சுவர்களில் ஏற்பட்ட விரிசல்களை பழுதுபார்த்தல்
- ❖ பள்ளி கட்டடங்களுக்கு வெள்ளை / கலர் வர்ணம் பூசுதல் (கடந்த 3 வருடங்களுக்குள் யாதொரு திட்டத்திலும் வெள்ளை / கலர் வர்ணம் பூசிய கட்டடங்கள் தவிர)

**(ii) சமையலறைக் கூடம்**

- சமையலறைக் கூடம் இல்லாத பள்ளிகளில் புதிய சமையலறைக் கூடத்தை மழைநீர் சேகரிப்பு அமைப்புடன் கட்டுதல்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மாதிரி வரைபடத்தின் (Type Design) அடிப்படையில் புதிய சமையலறைக் கூடம் கட்டப்பட வேண்டும்.
- ஏற்கெனவே உள்ள சமையலறைக் கூடத்தில் போதுமான இடம் இல்லாதிருப்பின் மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையான அரிசி, தானியங்கள் மற்றும் இதர உபகரணங்களை இருப்பு வைத்துக் கொள்ள கூடுதல் அறைகள் / இருப்பறைகள் கட்டலாம்.
- பழுதடைந்த ஆனால் கட்டமைப்பு உறுதியான நிலையிலுள்ள சமையலறைக் கூடங்களில் பழுது பார்த்தல் / புதுப்பித்தல் பணி மேற்கொள்ளலாம்.

**(iii) குடிநீர் வசதிகள்**

- தேவை ஏற்படும் இடங்களில் குடிநீர் குழாய் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளலாம்.
- புதிய குடிநீர் இணைப்புகள் தேவைப்படின் அருகிலுள்ள ஊராட்சி குடிநீர் இணைப்புகளிலிருந்து குடிநீர் சேகரிப்பு தொட்டியுடன் கூடிய வசதி செய்யலாம்.
- தேவையான இடங்களில் புதிய ஆழ்துளை கிணறு (கைப்பம்பு இணைப்புடன்) அமைக்கலாம். சாத்தியமான இடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் கட்டி அதன்மேல் கைபம்பு அமைக்கலாம்.
- பள்ளிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின், அவை பழுது பார்க்கப்பட்டு பள்ளிக்கு குடிநீர் வழங்கலாம்.

**(iv) கழிப்பறைகள்**

அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலும் மாணவ மாணவியருக்குத் தனித்தனியே போதுமான அளவில் கழிப்பறைகள் இருக்க வேண்டும். பெரும்பாலான பள்ளிகளில், முழுசுகாதார இயக்கம் (TSC) / நிர்மல் பாரத் அபியான் (NBA) மற்றும் பிற திட்டங்களான நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் (MPLADS), சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் (MLACDS) போன்ற திட்டங்களின் மூலம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. இருப்பினும் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளலாம்.

1. புதிய கழிப்பறைகள் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வெவ்வேறு இடைவேளை நேரத்தில் பயன்படுத்தக்கூடிய எண்ணிக்கைக்கேற்ப கட்டப்படும்.

2. நடுநிலைப் பள்ளிகளில் அமைக்கப்படவுள்ள மாணவிகளின் புதிய கழிப்பறையில் எரியூட்டிகள் அமைக்கப்படவேண்டும்.
3. ஏற்கனவே உள்ள பள்ளி கழிப்பறைகளின் கான்கிரிட் கூரை, சுவர்கள், தரை வடிகால்கள், கழிப்பறை கோப்பை, கழிவுநீர்த் தொட்டி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் / புதுப்பித்தல் பணிகளை செய்யலாம்.
4. தேவை ஏற்படும் இடங்களில் கழிப்பறைகளில் தரை மற்றும் உட்புற சுவர்களில் சுகாதார ஓடுகள் (Sanitary Tiles ) பதிக்கலாம்.
5. கழிப்பறைகளில் குழாய் அல்லது நீர் தேக்க தொட்டி அமைத்து அதன் மூலம் தண்ணீர் வசதி ஏற்படுத்தி தரவேண்டும்.
6. கழிப்பறைகளுக்கு வெள்ளை / கலர் வர்ணம் பூசலாம். ( 3 வருடங்களுக்குள் பிற திட்டங்களின் கீழ் வெள்ளை / கலர் வர்ணம் பூசப்பட்ட கட்டடங்கள் தவிர)

**(v) சுற்றுச் சுவர்கள்**

தேவையின் அடிப்படையிலும் மற்றும் நிதி நிலையின் அடிப்படையிலும், பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர்கள் கட்டலாம். பள்ளியின் இரண்டு அல்லது மூன்று பக்கங்களில் சுற்றுச்சுவர் உள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை அளித்து மாணவர்களின் பாதுகாப்பிற்காக இதர பக்கங்களிலும் முழுமையாக சுற்றுச் சுவர் கட்டப்படவேண்டும். மேலும் சாலையை ஒட்டியுள்ள பள்ளிகளில் மாணவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு முன்பக்கச் சுற்றுச்சுவர் கட்ட முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

**3. பணிகள் தெரிவு செய்தல் மற்றும் இறுதி செய்தல்**

A. பணிகளை தேர்வு செய்து, இறுதி செய்கையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளை கடைபிடித்தல் வேண்டும்.

❖ எடுக்கப்படவேண்டிய பணிகள் குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியல் தயார் செய்ய கீழ்க்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைக்கப்படவேண்டும்
   1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
   2. உதவி பொறியாளர் (ஊ.வ) / இளநிலை பொறியாளர்
   3. பள்ளி தலைமையாசிரியர்

❖ மேற்படி குழுவானது ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தேவையான பணிகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யும்.

❖ மேற்படி குழு, வகுப்பறைகள், சமையலறைக்கூடம், குடிநீர் வழங்குதல், கழிப்பறை கட்டுதல் போன்ற புதிய பணிகளை தேர்வு செய்ய தாய் திட்ட கணக்கெடுப்பில் உள்ள

விவரங்களை மூல ஆதாரமாக எடுத்துக்கொண்டு, ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளை கணக்கில் கொண்டு, மீதமுள்ள தேவையான பணிகளை அந்தப் பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டு முன்னுரிமை பட்டியலை தயார் செய்ய வேண்டும்.

- 2011–12ஆம் ஆண்டு தாய் திட்ட குக்கிராமங்களில் உள்ள பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை கண்டறிய, குழு அனைத்து பள்ளிகளையும் ஆய்வு செய்து, முன்னுரிமை அடிப்படையில் தேவையான பணிகளின் விவரப் பட்டியலை தயாரிக்க வேண்டும்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களால் புதிய மற்றும் பழுதுபார்த்தல் பணிகளை முடிவு செய்ய வேண்டி "மதிப்பீட்டுத்தாள்" எனப்படும் விரிவான படிவம் அனுப்பிவைக்கப்படும்.

B. ஒரு குறிப்பிட்ட பள்ளிக் கட்டடம், சமையலறைக்கூடம் அல்லது கழிப்பறை, பாழடைந்த நிலையில் உள்ளதை முழுவதுமாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என குழு கருதினால், அந்த கட்டடத்தை இடிக்க பரிந்துரை செய்யலாம். அதன்படி, அரசாணை (நிலை) எண். 56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–4) துறை, நாள்.3.04.2008–ல் உள்ள நிபந்தனைகளின்படி, உரிய வழிமுறைகளை பின்பற்றி கட்டடத்தை இடிக்க செயற்பொறியாளர் (ஊ.வ) உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**4. தேர்வு செய்யப்பட்ட பணிகளை சோதனை சரிபார்ப்பு**

மதிப்பீடு தயாரிப்பதற்கு முன்னரே, ஆரம்பம் முதல் முறையான கள ஆய்வு மேற்கொள்ளுதல் அவசியம் ஆகும். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பணிகளை, சோதனை முறையில் சரிபார்த்தால்தான் சரியான மதிப்பீடு தயாரிக்க ஏதுவாயிருக்கும். சோதனை சரிபார்த்தல் பணி மேற்கொள்ளப்படும் போது கீழ்க்கண்டவைகள் உறுதி செய்ய வேண்டும்.

i. பணிகளில் தேவையான இனம் ஏதாவது தவறுதலாக விடுபட்டுள்ளதா ?
ii. பணிகளில் தேவையில்லாத இனம் தவறுதலாக சேர்க்கப்பட்டு உள்ளதா ?
iii. விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதா ?
iv. பழுது பார்த்தல் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அதிகமாயிருப்பின், அவற்றை முழுமையாக ஆய்வு செய்தல் வேண்டும்.
v. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படாத இனம் எதுவும் சேர்க்கப்படவில்லை.
vi. 2011–12–ம் ஆண்டு தாய் திட்டத்தினை செயல்படுத்திடத் தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் மட்டுமே பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பணிகள் தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளில், சோதனை சரிபார்ப்பை கீழ்க்கண்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| (i) மாவட்ட ஆட்சியர் | – | 10% |
| (ii) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | – | 20% |
| (iii) செயற்பொறியாளர் (ஊ.வ) | – | 20% |

உதவி இயக்குநர் நிலை அலுவலர்கள் / உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) 100 சதவீதம் சரிபார்ப்பு மேற்கொள்ள வேண்டும்.

**5. நிர்வாக அனுமதி**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும். நிர்வாக அனுமதி வழங்கும் முன் ஒவ்வொரு கருத்துருவுடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(i) பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ள தேர்வுக்குழுவிலுள்ள உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்ட "மதிப்பீட்டுத் தாள்".

(ii) பத்தி 4–ல் குறிப்பிட்டுள்ளவாறு, மாவட்ட அளவிலான அலுவலர்களால் உரிய சோதனை சரிபார்த்தல் மற்றும் உதவி இயக்குநர் / உதவி செயற்பொறியாளர் நிலை அலுவலர்கள் 100% சோதனை சரிபார்த்தலை திருப்திகரமாக நிறைவு செய்ததை உறுதி செய்தல்.

(iii) ஒவ்வொரு பணிக்கும் விரிவான மதிப்பீடு தயார் செய்ய வேண்டும். எத்தகைய நிலையிலும் தோராய மதிப்பீட்டின் அடிப்படையில் கருத்துரு அனுப்புதல் கூடாது

(iv) பள்ளி கட்டடம் / சமையலறைக்கூடம் / கழிப்பறை கட்டடங்களின் உள் மற்றும் வெளிப்புறத்தோற்றத்தின் பல்வேறு புகைப்படங்கள் மதிப்பீட்டுடன் இணைக்கப்பட வேண்டும். புகைப்படங்கள் இணைக்கப்படவில்லை எனில் மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்க கூடாது.

குறிப்பு –

வேலைகளின் எண்ணிக்கையை உறுதி செய்யும் நோக்கத்திற்காகவும் அல்லது வேலைகளின் விரிவான மதிப்பீடுகள் பெறவும் பணிகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

- ஒரு பள்ளி வளாகத்திற்குள் உள்ள அனைத்து பள்ளி கட்டடம் / வகுப்பறை பழுது பார்ப்பதை ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளியிலுள்ள அனைத்து கழிப்பிடங்களையும் பழுது பார்ப்பதை ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

- ஒரு பள்ளியிலுள்ள சமையலறையின் பழுதுகள் அனைத்தையும் பார்ப்பதை ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளியில் பழுது பார்க்கப்படும் அனைத்து குடிநீர் வசதிக்கான வேலைகளையும் ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- புதிய வகுப்பறை கட்டுதல் / பள்ளி கட்டடம் கட்டுதல் தனியாக / ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- புதிய கழிப்பறை கட்டுவதை தனி / ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- புதிய சமையலறைகூடம் கட்டுவதை தனி / ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- புதிய குடிநீர் இணைப்பு வேலை மற்றும் மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் தேக்கத்தொட்டி தனி / ஒரு வேலையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- புதிய சுற்றுச்சுவர் கட்டுதல் தனி / ஒரு வேலையாக எடுத்துக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டு

ஒரு பள்ளி வளாகத்திற்குள் 2 பள்ளி கட்டடங்கள், 2 கழிப்பறைகள், 1 சமையலறை கூடம் ஆகியவற்றை பழுது பார்த்தல் பணிகள் மற்றும் ஒரு புதிய பள்ளி கட்டடம், 1 கழிப்பறை , 1 புதிய குடிநீர் பணிகள் எடுக்கும் பொழுது கீழ்க்கண்டவாறு பணிகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யலாம்.

| | |
|---|---|
| பள்ளி கட்டடம் பழுதுபார்க்கும் பணி | –1 |
| கழிப்பறை கட்டடம் பழுதுபார்க்கும் பணி | –1 |
| சமையலறை கட்டடம் பழுதுபார்க்கும் பணி | –1 |
| புதிய பள்ளி கட்டடம் | –1 |
| புதிய கழிப்பறை மற்றும் | –1 |
| புதிய குடிநீர் பணி | –1 |

இவ்வாறாக அவ்வளாகத்திற்குள் மொத்தமாக 6 வேலைகள் எடுக்கப்பட வேண்டும்.

**6. வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி**

வேலைகள் ஒப்பந்தப்புள்ளி முறை மூலமாக நிறைவேற்றப்பட வேண்டும். ஒரு பள்ளிக்குள் மேற்கொள்ளப்படும் அனைத்து பராமரிப்பு / பழுதுபார்த்தல் பணிகளும் ஒப்பந்தப்புள்ளி கோரும் செயல்முறைக்காக ஒரே வேலையாக கருதப்படும். உதாரணமாக ஒரு பள்ளிக்கட்டடம் பழுது பார்த்தல், ஒரு கழிப்பறை கட்டடம் பழுது பார்த்தல், ஒரு சமையலறை கூடம் பழுது பார்த்தல் பணி ஆகியவை ஒரே தொகுப்பாக (package) எடுக்கப்பட்டு அத்தொகுப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும். பள்ளிக்கட்டடம், சமையலறை கூடம், கழிப்பறை கட்டுதல் பணி போன்ற புதிய பணிகளாக இருப்பின் தனித்தனி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும். 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவு அற்ற ஒப்பந்தப்புள்ளிகள்

சட்டம் மற்றும் விதிகள் 2000–ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு,அரசாணை நிலை எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ராஜ் 1) துறை நாள்.20.12.2007–ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் (வேலையின் வரைபடம் தயாரித்தல் மற்றும் வேலையின் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மாதிரி ஒப்பந்த நிபந்தனைகள்) விதிகள் 2007 அட்டவணை 1–லுள்ள அறிவிக்கை II –ல் தெரிவித்துள்ள நடைமுறைகளை பின்பற்றி செயல்படுத்தப்பட வேண்டும்.

**7. நிதி வழங்குதல்**

மொத்த ஒதுக்கீடான ரூ.100 கோடியில் 99 விழுக்காடு அதாவது ரூ.99 கோடி, மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி, நடுநிலைப் பள்ளிகள் விகிதாச்சார அடிப்படையிலும், வேலைகளின் உண்மையான மதிப்பீடுகளின் அடிப்படையிலும் சரிசமமாக மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதிக்காக தொடங்கப்பட்ட தனி வங்கி கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் மாவட்ட அளவில் இத்திட்டத்திற்கென துவங்கப்பட்ட தனி வங்கி கணக்கில் நிதியை பராமரிக்க வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தனி கணக்கு ஒன்றை பராமரிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர், ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கும், வட்டாரத்திற்கு அனுமதிக்கப்பட்ட பணிகளின் அடிப்படையில் தொகையினை மறு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரால் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கு நிதி விடுவிக்கப்பட வேண்டும். அனைத்து வங்கி கணக்குகளும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் தொடங்கப்பட வேண்டும்.

மொத்த ஒதுக்கீட்டில் 1 விழுக்காடு அதாவது ரூ.1 கோடி செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மேற்படி தொகையில் ரூ.25 இலட்சம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மீதமுள்ள ரூ.75 இலட்சம் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

**8. ஆவணப்படுத்துதல்**

இத்திட்டத்தில் வேலைகளை அடையாளம் காணுதல் முதற்கொண்டு, அதனை முடிக்கும் வரையிலான அனைத்து விரிவான, பலவிதமான நிலைகளிலும் ஆவணங்கள் தயாரிக்க வேண்டும். வேலை முடிக்கப்பட்ட பின்பு, அதாவது பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள் முடிவுற்ற பின்னர், திட்டத்தின் பெயர், "ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்", "கட்டடம் கட்டுவதற்கு / புதுப்பித்தலுக்கு செலவிடப்பட்ட தொகை" போன்ற விவரங்கள் கட்டடத்தின் ஒரு பகுதியில், முக்கியமாக தமிழில் எழுதப்பட வேண்டும்.

இத்திட்டத்திற்கு கூடுதல் நிதி கோரப்படமாட்டாது என்பதுடன் மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் உள்விகிதாசாரம் மாற்றப்படமாட்டாது எனும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் சூழ்நிலைக்கேற்ப, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரை கலந்தாலோசித்து, தேவையான மாற்றங்களை செய்ய அரசு முதன்மை செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.